**செய்தி வெளியீடு எண்: 112/2021** **நாள்: 15.12.2022**

**பத்திரிக்கைச் செய்தி**

**மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் இசை நிகழ்ச்சி**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை கொண்டாடுவதன் ஒரு பகுதியாக, சென்னை முழுவதும் உள்ள பல இசைக் கலைஞர்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து சென்னை மக்களுக்கு தமிழ் கலாச்சாரத்தின் இசை மற்றும் கலை நிகழ்ச்சிகளை வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக 17.12.2022 மற்றும் 18.12.2022 அன்று மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் இசை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், "ஆன் தி ஸ்டீரிட் ஆப் சென்னை" கலை குழுவுடன் இணைந்து 17.12.2022 (சனிக்கிழமை) விமான நிலையம் (காலை 10 - 11 மணி); கிண்டி (11.45 - 1 மணி); நந்தனம் (2.15 - 3.15 மணி); ஆயிரம் விளக்கு (மாலை 4 - 5 மணி); மண்ணடி (மாலை 6 - 6.30 மணி); புரட்சித்தலைவர் டாக்டர். எம்.ஜி.ராமச்சந்திரன் சென்ட்ரல் (மாலை 6 - 9.30 மணி); பரங்கிமலை (காலை 10 - 11 மணி); அசோக் நகர் (11.45 - 1 மணி); புரட்சித்தலைவி டாக்டர். ஜெ.ஜெயலலிதா புறநகர் பேருந்து நிலையம் (2.15 - 3.15 மணி); திருமங்கலம் (மாலை 4 - 5 மணி) மெட்ரோ இரயில் நிலையங்களில் (தெரு நிலை) மற்றும் மெட்ரோ இரயில்களில் (விம்கோ நகர் முதல் விமான நிலையம் வரை இரவு 7 - 8.30 மணி மற்றும் சென்ட்ரல் முதல் பரங்கிமலை மெட்ரோ வரை இரவு 7 - 8.30) மெல்லிசை கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

இதனைத் தொடர்ந்து, 18.12.2022 (ஞாயிற்றுக்கிழமை) விம்கோ நகர் (காலை 10.30 - 11.15 மணி); வண்ணாரப்பேட்டை (மதியம் 12 - 1 மணி); எல்.ஐ.சி (2.15 - 3 மணி); அறிஞர் அண்ணா ஆலந்தூர் மெட்ரோ (காலை 10 - 11 மணி மற்றும் மாலை 3.45 - 4.30 மணி); விமான நிலையம் (மாலை 5.15 - 6.30); வடபழனி (11.45 - 12.30 மணி); கோயம்பேடு (மதியம் 1.15 - 2 மணி); செனாய் நகர் (2.45 - 3.30 மணி); நேரு பூங்கா (மாலை 4 - 5 மணி) மெட்ரோ இரயில் நிலையங்களில் (தெரு நிலை) மற்றும் மெட்ரோ இரயில்களில் (விமான நிலையம் முதல் விம்கோ நகர் வரை காலை 8.30 - 9.30 மணி மற்றும் சென்ட்ரல் முதல் பரங்கிமலை மெட்ரோ வரை மாலை 5.45 - 7.45) மெல்லிசை கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

சென்னை மாநகரில் வசிக்கும் மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள், மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெறும் இசை மற்றும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளை கண்டுகளித்து சிறப்பிக்குமாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் தெரிவித்துள்ளது.

**வெளியீடு: இணை இயக்குநர் (மக்கள் தொடர்பு)**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை.**